# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 166/ந/2024
நாள் 16.05.2025

திரு.M.S.முஹம்மது சாலிஹ்,
சென்னை – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
காயல்பட்டினம் நகராட்சி, காயல்பட்டினம். – எதிர்மனுதாரர்

சென்னை, முத்துமாரி செட்டி தெரு, புதிய எண்.86, பழைய எண்.37 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.M.S.முஹம்மது சாலிஹ் என்பவரின் 31.08.2024 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.09.2024 அன்று பெறப்பட்டு, 166/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை, முத்துமாரி செட்டி தெரு, புதிய எண்.86, பழைய எண்.37 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.M.S.முஹம்மது சாலிஹ் என்பவர் தனது 31.08.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"We would like to bring to your attention, at the junction of Periya Nesavu Street and Main Road in Kayalpattinam (Thoothukudi District). a shopping complex called Meefa Mall had been constructed recently. See Annexure-I. (picture of the building). This is a busy intersection. The main road in fact used to be State Highway, now is under the control of National Highway.

The area of the building is above 7000 Sq.ft. hence, the building permit should have been issued by the DTCP – with provisions for parking etc. In total violation of all norms, the officials of Kayalpattinam Municipality had processed the permission for building construction.

In 2019, the promoters- in connivance with the Municipality officials- had fraudulently submitted to the Municipality four different plans for the shopping complex, each plan made to measure less than 2000 Sq.ft. to circumvent approaching DTCP.

The building plan approval nos. are

(1) 139/BL/2019/00032 (Dtd.23.09.2019) measuring 1045 Sq.ft.
(2) 139/BL/2019/00033 (Dtd.23.09.2019) measuring 1994 Sq.ft.
(3) 139/BL/2019/00034 (Dtd.23.09.2019)measuring 1994 Sq.ft.
(4) 139/BL/2019/00035 (Dtd.23.09.2019) measuring 1994 Sq.ft.

As can be seen, the true size of the complex is 7000 + Sq.f.t And hence, should have been processed by DTCP.

Moreover, as per the illegally approved plan, there should be a Basement Floor (with parking). a Ground Floor and a First Floor. Yet, even this requirement has been violated. However, No basement floor with parking was constructed. Instead a Ground Floor, a First Floor and a Second Floor had been constructed in total and major deviation. None of these floors have facility for parking either.

These violations, were brought to the attention of senior officials in Municipal Administration and the DTCP as early as 2021 itself. In fact, DTCP Head quarters directed their Thoothukudi District Office to inspect the building and report any violation. But no action was taken.

Subsequently, we sought the copies of building plans from the Municipality under RTI Act. The Municipality denied giving that information. Finally, a prolonged struggle, after filing a case before Tamil Nadu State Information Commission, the Municipality provided the documents, which are enclosed. The documents unequivocally confirm the violations.

The officials of Kayalpattinam Municipality had quite clearly granted these permissions for illegal considerations and they have further ignored the complaints to take action. Hence, we submit this complaint before you – so that appropriate action will be taken against the Commissioner and all others who connived to grant this illegal Building Plan." என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 30.09.2024 நாளிட்ட அறிவிப்பின் மூலம் காயல்பட்டினம் நகராட்சி ஆணையாளர் கோரப்பட்டார்.

3. காயல்பட்டினம் நகராட்சி ஆணையாளர் தனது 25.10.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்களை சமர்ப்பித்துள்ளார்.

"காயல்பட்டினம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பழைய வார்டு எண்.11, புதிய வார்டு எண்.16, பெரிய நெசவு தெருவில் பழைய புல எண்.468/1ஏ, புதிய புல எண்.763/1ல், 1.திரு.ஜமால் அப்துல் நாஸர், எம்பிஏ, (2) திரு. பாதுல் அஷ்ஹாபு முனவ்வர், (3) திருமதி.செய்யது ஹலிமா தமன்னா, (4) திருமதி. பாத்திமா எஸ். எச். ஆகியோர் கட்டிட அனுமதி கோரி ஆவண எண்.1318/2018, 1317/2018, 1319/2018 மற்றும் 354/2018 ஆகியவற்றின் அடிப்படையில் தரை கீழ் தளம் (வாகன நிறுத்தமாகவும்), தரை மற்றும் முதல் தளங்கள் வணிக பயன்பாட்டிற்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டிட அனுமதி எண்.

139/BL/2019/32. 139/BL/2019/33, 139/BL/2019/34, 139/BL/2019/35 ஆகியவற்றின் மூலமாக நாள்.23.09.2019–ல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இதே புல எண்ணிற்கு திருத்திய வரைபடம் கோரி, நாள் 02.12.2021, 07.12.2021, 08.12.2021, 10.12.2021, 11.12.2021, 12.12.2021 மற்றும் 17.12.2021 ஆகிய தேதிகளில், திரு/திருமதி.பாத்திமா, நூருல் ஜன், செய்யது பஜீலா, செய்யது அகமது பாத்திமா, எஸ்.ஏ.கே. முகம்மது அலி மற்றும் கதிஜத்துல் குபுரா, ஜாகியத்துல் தாஹிரா, கபீர் மற்றும் காதிரா முஸ்பீகா, பாதுல் அஷ்ஹாபு முனவ்வர், ஜமால் அப்துல் நாசர், செய்யது ஹலிமா தமன்னா ஆகிய பெயர்களில் நகராட்சியில் மீள விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது. மேலும் திருமதி. பாத்திமா என்ற விண்ணப்பதாரருக்கு மட்டும் தரை மற்றும் முதல்தளத்தில் கடைகள் உள்ளன. ஏனைய விண்ணப்பதாரர்களுக்கு தரை மற்றும் முதல் தளங்களில் கடைகளும், இரண்டாம் தளத்தில் குடியிருப்பு பகுதியாகவும், கட்டிட அனுமதியானது, கடந்த 29.12.2021–ல் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது மனுதாரர், மக்கள் உரிமைநாட்டல் மற்றும் வழிபாட்டு அமைப்பு செயலாளர் திரு.எம்.எஸ்.முஹம்மது சாலிஹீ என்பவரது மனுவின் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, அரசாணை நிலை எண்.195 நகர் ஊரமைப்பு துறை சட்ட பிரிவு 56,57, 80(A) ன்படி, காயல்பட்டினம் நகராட்சி அலுவலுக ந.க.எண்.84/2021/அ2 நாள் 30.09.2024ன் மூலம் தற்போதைய கட்டிட உரிமையாளர்களான 11 நபர்களிடம், புகார் தொடர்பான விளக்கத்தினை நகராட்சியில் சமர்ப்பித்திட கேட்ட அறிவிப்பு வழங்கப்பட்ட கோப்பு நடவடிக்கையில் உள்ளது என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

4) இந்நிலையில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான காயல்பட்டினம் நகராட்சி ஆணையாளர் இருவரையும் 13.12.2024 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி இம்முறைமன்ற நடுவத்தின் 29.11.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு.M.S.முஹம்மது சாலிஹ் என்பவர் 13.12.2024 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

“இன்று 13.12.2024 நடைபெற்ற விசாரணையில் மாண்புமிகு முறைமன்ற நடுவர் முன்னிலையில், எனது மனுவில் தெரிவித்திருந்த புகார்களை வலியுறுத்தி மீண்டும் தெரிவித்தேன்.

குறிப்பாக 7000 சதுர அடி கட்டுமானத்திற்கு காயல்பட்டினம் நகராட்சி ஒப்புதல் வழங்க இயலாது. DTCP தான் வழங்க வேண்டும்.

2019ம் ஆண்டில் காயல்பட்டினம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பழைய வார்டு எண்.11, புதிய வார்டு எண்.16, பெரிய நெசவு தெருவில் பழைய புல எண்.468/1ஏ, புதிய புல எண்.763/1ல் (1) திரு. ஜமால் அப்துல் நாசர், (2) திரு.பாதுல் அஷ்ஹாபு முனவ்வர் (3) திருமதி. செய்யது ஹலிமா தமன்னா, (4) திருமதி.பாத்திமா எஸ்.எச். ஆகியோர் தனித்தனியாக 2000 சதுர அடிக்கு குறைவாக வணிக கட்டிடத்தை கட்டுவதற்காக காயல்பட்டினம் நகராட்சியில் வரைபட அனுமதி கோரி பெறப்பட்டது.

ஆனால் வரைபட அனுமதிக்கு மாறாக சுமாராக 7000 சதுர அடியில் ஒரே கட்டிடமாக விதி மீறி கட்டப்பட்டு, நகர் ஊரமைப்பு இயக்கத்தின் அனுமதியும் பெறப்படாமல் உள்ளது.

மேலும் அனுமதியில்லாமல் முறைகேடாக இரண்டாவது மாடி கட்டப்பட்டுள்ளது.

வரைபடத்தின்படி தரைதளம் இல்லாமலும், வாகன நிறுத்தம் இடம் இல்லாமலும் விதிகள் மீறப்பட்டு கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

இந்த புகார் நகராட்சிக்கு அளிக்கப்பட்ட பிறகும் நகராட்சி துரிதமான நடவடிக்கை எடுக்கவில்லை. காலம் தாழ்த்தி விதிமீறியவர்களை தப்பிப்பதற்கான செயல்களையே செய்து வருகிறார்கள்.

எனவே மேற்காணும் விதி மீறி கட்டப்பட்ட கட்டிடத்தினை கள ஆய்வு செய்யாத சம்மந்தப்பட்ட நகராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு வேண்டிக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

6)எதிர்மனுதாரரான காயல்பட்டினம் நகராட்சி ஆணையரின் சார்பாக 13.12.2024 அன்றைய விசாரணையில் காயல்பட்டினம் நகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளர் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

காயல்பட்டினம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு–11, பெரிய நெசவு தெருவில் நான்கு விண்ணப்பதாரர்களால் தனித்தனி மனுவின் பெயரில் ஆவணங்களின் பரப்பளவு 2000 சதுர அடிக்கு கீழ் மற்றும் கட்டிட பரப்பளவு 2000 சதுர அடிக்கு கீழ் இருந்த நிலையில் தரை கீழ் தளம், தரை தளம் மற்றும் முதல் தளங்களுக்கு வணிக பயன்பாட்டிறகு நாள் 23.09.2019–ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

நாள். 23.09.2019–ல் அனுமதி வழங்கப்பட்ட கட்டிட வரைபடத்தில் மீள 12 தனி நபர்களுக்கு கிரைய ஆவணம் மூலம் பாத்தியப்பட்டு நகராட்சியில் திருத்திய வரைபடம் 02.12.2021, 07.12.2021, 08.12.2021, 10.12.2021, 11.12.2021, 12.12.2021 மற்றும் 17.12.2021 ஆகிய தேதிகளில் தரை மற்றும் முதல் தளத்தில் கடைகளாகவும், இரண்டாம் தளத்தில் குடியிருப்பாகவும் திருத்தி வழங்கப்பட்டுள்ளது என்கிற விவரத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது மனுதாரர் மக்கள் உரிமை நாட்டல் மற்றும் வழிபாடு அமைப்பு செயலாளர் திரு.M.S.முஹம்மது சாலிஹ் என்பவரது புகார் மனுவின் அடிப்படையில் அரசாணை நிலை எண்.195–ன்படி படிவம்–1 நகர் ஊரமைப்பு சட்ட பிரிவு 56,57, 80(A) ன் கீழ் நாள். 30.09.2024 அன்று தற்போதைய கட்டிட உரிமையாளர்கள் 11 நபர்களுக்கு அறிவிப்பு சார்பு செய்யப்பட்டுள்ளது.

படிவம்–2 நாள் 14.11.2024 அன்று சார்பு செய்ய இருந்த நிலையில் கட்டிட உரிமையாளர்கள் படிவம்–1 சரியான முறையில் கட்டிட உரிமையாளருக்கு கிடைக்கப்பெறவில்லை என ஆட்சேபனை தெரிவித்ததன் அடிப்படையில் தனி நபரின் முகவரி சேகரிக்கப்பட்டு மீண்டும் படிவம்–1, நாள். 07.12.2024 அன்று பதிவு தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது.

தொடர்ந்து நகராட்சியால் வழங்கப்பெற்ற கால அளவிற்குள் கட்டிட உரிமையாளர் மூலம் எவ்வித பரிசீலனைக்குரிய நகராட்சியில் சமர்ப்பிக்கப்படாத நிலையில் கட்டிடம் சட்டத்திற்குட்பட்டு மேல் நடவடிக்கை தொடரப்படும் என அறிவிப்பு வழங்கப்பட்டு கோப்பு நடவடிக்கையில் உள்ளது என்கிற விவரத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என சமர்ப்பித்துள்ளார்.

7) இவ்வழக்கில் மேலும் விவரங்கள் தேவைப்பட்டதால், மேற்படி கட்டிடத்தின் தற்போதைய உரிமையாளர்கள் 11 நபர்களை 20.02.2025 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 13.02.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

8) 20.02.2025 அன்றைய நேரடி விசாரணையில் திரு (1) I.N.கபீர், தனக்காகவும், திருவாளர்கள் (1) நூருல் ஐன், (2)செய்யது அஹமது பாத்திமா, (3) ஜக்கியத்துல் தாஹிரா (4) திருமதி.முஸ்பிகா ஆகியோர்களுக்காகவும் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

"1) திருமதி.நூருல் ஐன் அவர்கள் 2394/2019 கிரைய ஆவணத்தின் அடிப்படையில் 172.50 சதுர அடி இடத்தை கிரையம் பெற்றுள்ளார். மேற்படி இடத்தில் அரசு விதிகளின்படி காயல்பட்டணம் நகராட்சியில் 2021–ல் திருத்திய வரைபட ஒப்புதல் பெற்று, அதன்படி கட்டிடம் கட்டியுள்ளார்.

புகார்தாரர் முஹம்மது சாலிஹ் சமர்ப்பித்துள்ள வரைபட ஒப்புதல் 2019–ல் முந்தைய உரிமையாளர் பெற்றதாகும். மேற்படி வரைபடத்திற்கும் அவரது கட்டிடத்திற்கும் சம்பந்தமில்லை என உறுதியாக கூறுகிறேன். அவரது கட்டிடத்தின் வரைபட ஒப்புதலை இத்துடன் இணைத்துள்ளேன்.

2) திருமதி.செய்யது அஹமது பாத்திமா அவர்கள் 2393/2019 கிரைய ஆவணத்தின் அடிப்படையில் 172.50 சதுர அடி இடத்தை கிரையம் பெற்றுள்ளார். மேற்படி இடத்திற்கு அரசு விதிகளின்படி காயல்பட்டணம் நகராட்சியின் 2021–ல் திருத்திய வரைபட ஒப்புதல் பெற்று அதன்படி கட்டிடம் கட்டியுள்ளார். மேற்படி வரைபடத்தை இத்துடன் இணைத்துள்ளேன். புகார்தாரர் சமர்ப்பித்துள்ள வரைபட ஒப்புதலுக்கும் திருமதி. செய்யது அஹமது பாத்திமா கட்டிடத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

3) திருமதி.ஜக்கியத்துல் தாஹிரா அவர்கள் 2390/2019 ஆவணத்தின் அடிப்படையில் 200 சதுர இடத்தை கிரையம் பெற்றுள்ளார். மேற்படி இடத்தில் அரசு விதிகளின் அடிப்படையில் காயல்பட்டணம் நகராட்சியில் 2021–ல் திருத்திய வரைபட ஒப்புதல் பெற்று அதன் அடிப்படையில் கட்டிடம் கட்டியுள்ளார். மேற்படி வரைபடத்தை இத்துடன் இணைத்துள்ளேன். புகார்தாரர் முஹம்மது சாலிஹ் சமர்ப்பித்துள்ள வரைபட ஒப்புதலுக்கும் அவரது கட்டிடத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை.

4) நானும் (திரு.கபீர்) எனது மனைவி திருமதி.முஸ்பிகா அவர்களும் காயல்பட்டணம் மெயின் ரோட்டில் அமைந்துள்ள 200 சதுர அடி இடத்தை 2389/2019 கிரைய ஆவணத்தின் அடிப்படையில் கிரையம் பெற்றோம். மேற்படி இடத்திற்கு காயல்பட்டணம் நகராட்சியில் அரசு விதிமுறைகளின்படி 2021–ல் திருத்திய வரைபடம் ஒப்புதல் பெற்று, அதனடிப்படையில் கட்டிடம் கட்டி உள்ளோம்.

புகார்தாரர் முஹம்மது சாலிஹ் கொடுத்துள்ள வரைபடம் எங்களது முந்தைய உரிமையாளருடையது ஆகும். மேற்படி வரைபடத்திற்கும் எங்களது கட்டிடத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட விவரங்களை இம்முறைமன்ற நடுவத்தில் பணிந்து சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

9) 20.02.2025 அன்றைய நேரடி விசாரணையில் செய்யது ஹலிமா தமன்னா என்பவர் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"காயல்பட்டணம் தென்பாக கிராமம் 468/1A குடியிருப்பு நத்தத்தில் எங்கள் குடும்பத்திற்குப் பாத்தியப்பட்ட இடத்தில் ஏற்பாடு ஆவணம் 1317/2018 மூலம் பாத்தியப்படுத்தி தந்தார்கள். மேற்படி இடத்தில் ஏற்பாடு ஆவணம் 937/2021 மற்றும் 936/2021 மூலம் எனது சகோதரன் பாதுல் அஷ்ஹாபு முனவ்வர்அவர்களுக்கு நன்கொடை கொடுத்து விட்டேன். எனக்கு எஞ்சிய 172.50 சதுர அடி இடத்தில் கட்டிடம் கட்ட காயல்பட்டணம் நகராட்சியில் 2021–ல் திருத்திய வரைபட ஒப்புதல் பெற்று அதன்படி கடை கட்டியுள்ளேன்.

திரு.முஹம்மது சாலிஹ் அவர்கள் சமர்ப்பித்துள்ள வரைபடத்திற்கும் எனது கட்டிடத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்'' என சமர்ப்பித்துள்ளார்.

10) 20.02.2025 அன்றைய நேரடி விசாரணையில் திருமதி.S.H.பாத்திமா என்பவர் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

"காயல்பட்டணம் தென்பாக கிராமம் 468/1A குடியிருப்பு நத்தத்தில் எங்கள் குடும்பத்திற்குப் பாத்தியப்பட்ட இடத்தில் பகுதியை விற்று விட்டு, எஞ்சியுள்ள பகுதியில் ஏற்பாடு ஆவணம் 1319/2018 மூலம் பாத்தியப்படுத்தி தந்தார்கள். மேற்படி இடத்தில் பிரிதொரு ஏற்பாடு ஆவணம் 935/2021 மூலம் எனது மகள் தமன்னாவுக்கும் ஏற்பாடு ஆவணம் 936/2021 மூலம் மகன் பாதுல் அஷ்ஹாபுக்கும், ஏற்பாடு ஆவணம் 934/2021 மூலம் கணவர் ஜமால் அப்துல் நாசர் அவர்களுக்கும் நன்கொடையாக கொடுத்து விட்டேன். எஞ்சிய 148.40 சதுர அடி இடத்திற்கு 2021–ல் காயல்பட்டணம் நகராட்சியில் திருத்திய வரைபட ஒப்புதல் பெற்றுக் கட்டிடம் கட்டியுள்ளேன்.

எனது கட்டிடத்திற்கும், புகார்தாரர் முஹம்மது சாலிஹ் சமர்ப்பித்துள்ள வரைபடத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

11) 20.02.2025 அன்றைய நேரடி விசாரணையில் திரு.அமீன் அப்துல் காதர் என்பவர் திரு.S.A.K.முஹம்மது அலி மற்றும் திருமதி.செய்யது பஜீலா ஆகியோர்களுக்காக ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை இம்முறைமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

"திரு.S.A.K.முஹம்மது அலி அவர்கள் 2392/2019 கிரைய ஆவணம் மூலம் 172.50 சதுர அடி இடம், பாதை வசதிகளுடன் கிரையம் பெற்றுள்ளார். மேற்படி இடத்திற்கு அரசு விதகளின்படி காயல்பட்டிணம் நகராட்சியில் 2021–ல் திருத்திய வரைபட ஒப்புதல் மூலம் தரைதளம் + முதல் தளம் +2–வது தளம் கட்டிடம் கட்டி உள்ளார். மேற்படி வரைபடம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. முஹம்மது சாலிஹ் என்பவர் சம்பந்தப்பட்ட இடத்தின் முன்னாள் உரிமையாளர் பெற்ற வரைபட ஒப்புதலை சமர்ப்பித்துள்ளார்.

திருமதி.செய்யது பஜீலா அவர்கள் 2391/2021 ஆவணத்தின் அடிப்படையில் 200 சதுர அடி இடம் கிரையம் பெற்றுள்ளார். மேற்படி இடத்திற்கு அரசு விதிகளின்படி காயல்பட்டிணம் நகராட்சியில் 2021–ல் திருத்திய வரைபட ஒப்புதல் பெற்று கட்டிடம் கட்டியுள்ளார்.

புகார்தாரர் சமர்ப்பித்துள்ள வரைபடத்திற்கும் திரு.முஹம்மது அலி மற்றும் திருமதி.செய்யது பஜீலா அவர்களின் கட்டிடத்திற்கும் சம்மந்தமில்லை என இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்'' என சமர்ப்பித்துள்ளார்.

12) 20.02.2025 அன்றைய நேரடி விசாரணையில் திரு.பாதுல் அஷ்ஹாப் முனவ்வர் என்பவர் தனக்காகவும், திரு.ஜமால் அப்துல் நாசர் என்பவருக்காகவும் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"காயல்பட்டணம் தென்பாக கிராமத்தில் எனது தந்தையான திரு.ஜமால் அப்துல் நாசர் அவர்களுக்கு சொந்தமான இடத்தில் கட்டிடம் கட்டும் பொருட்டு நான்கு வரைபட ஒப்புதல்கள் காயல்பட்டணம் நகராட்சியில் எனது தந்தையால் பெறப்பட்டது. பின்னர் அவ்விடத்தில் ஒப்புதல்

வரைபடப்படி கட்டிடம் கட்ட இயலாத காரணத்தால், எங்கள் குடும்ப சூழ்நிலை காரணமாக கிரையம் கொடுத்துவிட்டு, எஞ்சிய இடத்தில் **165** சதுர அடி மற்றும் **200** சதுர அடியில் எனக்கும், **165** சதுர அடி எனது தந்தைக்கும், **2021–ல்** வரைபட மாற்றம் செய்து **03** திருத்திய வரைபட ஒப்புதல் பெறப்பட்டது. எங்களது கட்டிடம் வரைபட ஒப்புதல் அனுமதிப்படி Basement மற்றும் வாகன நிறுத்துமிடம் தேவையில்லை. நாங்கள் கட்டியுள்ள கட்டிடத்தில் எந்தவித விதிமீறலும் இல்லை என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துக்கொள்கிறோம். மனுதாரர் இம்முறை மன்றத்தில் சமர்ப்பித்துள்ளது, **2019**ஆம் ஆண்டில் பெறப்பட்ட வரைபடம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் **2021–ல்** பெற்ற திருத்திய வரைபட ஒப்புதல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்'' என சமர்ப்பித்துள்ளார்.

**13)** காயல்பட்டினம் நகராட்சி ஆணையரின் சார்பில் காயல்பட்டினம் நகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளர் **20.02.2025** அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

“காயல்பட்டணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பழைய வார்டு எண்.**11**, புதிய வார்டு எண்.**16**, பெரிய நெசவு தெருவில் உள்ள கட்டிடத்தின் பழைய புல எண்.**468/1A** புதிய புல எண்.**763/1–ல்** கட்டிட அனுமதி கோரிய ஆவண எண்.**1318/2018**, (Document area 93.89 Sq.m.. Buildup area 185.33 Sq.m.) **1317/2018**, (Document area 93.89 Sq.m.. Buildup area 185.33 Sq.m.) **1319/2018** (Document area 93.89 Sq.m.. Buildup area 185.33 Sq.m.) மற்றும் **354/2018** (Document area 54.86 Sq.m. Buildup area 97.14 Sq.m.) மூலம் **“பெறப்பட்ட கட்டிட அனுமதி”** எண்.**139/BL/2019/32, 139/BL/2019/33, 139/BL/2019/34, 139/BL/2019/35** (தரை கீழ் தளம் (வாகன நிறுத்தமாகவும்), தரை மற்றும் முதல் தளங்கள் வணிக பயன்பாட்டிற்கு) **“திருத்தப்பட்டு”** ஆவண எண்.**1319/2018**, (Document area 93.89 Sq.m. Buildup area 12.28 Sq.m.) **2394/2019** (Document area 16.03 Sq.m. Buildup area 21.07 Sq.m.) , **2391/2019** (Document area 18.58 Sq.m. Buildup area 25.22 Sq.m. ), **2393/2019** (Document area 16.03 Sq.m. Buildup area 21.07Sq.m.) **2392/2019** Document area 16.03 Sq.m. Buildup area 21.07 Sq.m. ) , **2390/2019** ( Document area 18.58 Sq.m. Buildup area 25.22 Sq.m. ), **2389/2019** (Document area 18.58 Sq.m. Buildup area 25.22 Sq.m. ), **937/2021** (Document area 18.58 Sq.m. Buildup area 25.22 Sq.m. ), **934/2021**(Document area 15.33 Sq.m. Buildup area 18.64 Sq.m.), **936/2021** (Document area 15.33 Sq.m. Buildup area 18.64 Sq.m. ), **935/2021** (Document area 23.38 Sq.m. Buildup area 33.19 Sq.m.), **1317/2018** (Document area 93.89 Sq.m. Buildup area 21.07 Sq.m.)மூலம் **“மீள விண்ணப்பம் செய்யப்பட்டு” REVISED PLAN APPROVAL** கட்டிட அனுமதி எண்.139/BL/2021/00151, 00154, 00139, 00140, 00141, 00143, 00144, 00147, 00155, 00146, 00145, 00142 என **“மொத்தம் 12 தனித்தனி”** நபர்களில் திருமதி.பாத்திமா என்ற விண்ணப்பதாரருக்கு மட்டும் தரை மற்றும் முதல் தளத்தில் கடைகளும், ஏனைய விண்ணப்பதாரர்களுக்கு தரை மற்றும் முதல் தளங்களில் கடைகளும், இரண்டாம் தளத்தில் குடியிருப்பு பகுதியாகவும் கட்டிட அனுமதியானது கடந்த **29.12.2021–ல்** வழங்கப்பட்டுள்ளது.

மேலும் அனுமதி கோரிய ஆவணங்களின் தபசில் நான்குமால் படி அனைத்து தனித்தனி கட்டிடத்திற்கும் நகராட்சி சாலை (அல்லது) நெடுஞ்சாலை (அல்லது) ஆவணப்படியான பொது பாதை அணுகு பாதையாக உள்ளதன் அடிப்படையில் வரைபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் தற்போதைய TAMILNADU COMBINED DEVELOPMENT RULE **2019** விதி எண்.**8**(i). **8**(ii), **8**(iii)–ன்படி கட்டிடத்திற்கு SET BACK வழங்கப்பட்டதுடன், PARKING விதி எண்.**35(4)** ANNEXURE –IV –ன்படி கட்டிட பரப்பளவு **50** சதுர மீட்டருக்கு குறைவாக உள்ளதால் எவ்வித

வாகன நிறுத்தமும் மேற்குறிப்பிட்டுள்ள 12 தனித்தனிநபர்களின் வரைபட ஒப்புதலில் வழங்கப்படவில்லை.

மேலும் நகராட்சி மூலம் " திருத்தப்பட்ட வரைபடம் மற்றும் கட்டிட அனுமதி" தொடர்பான ஆவணங்கள் விண்ணப்பதாரர் திரு.முஹம்மது சாலிஹ் என்பவர் நகராட்சியில் கோரும்பட்சத்தில் வழங்கப்படும் என்ற விபரத்துடன் காயல்பட்டணம் நகராட்சி விசாரணை தொடர்பான விளக்க கடிதமும் மனு தொடர்பான முழுமையான பத்திர பதிவு நகல், நகராட்சி மூலம் வழங்கப்பட்ட உத்தரவு, 2021ம் ஆண்டிற்கான திருத்திய வரைபட நகல் ஆகியவை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் முன்பு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்'' என சமர்ப்பித்துள்ளார்.

14) மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம், காயல்பட்டினம் நகராட்சி ஆணையாளரின்அறிக்கை, காயல்பட்டினம் நகராட்சி சார்பில் ஆஜரான நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலம் மற்றும் கட்டிட உரிமையாளர்களின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் மிக கவனமுடன் முழுமையாக பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரரின் புகார் மனுவில் காயல்பட்டினம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பெரிய நெசவு தெருவில் பழைய புல எண்.468/1ஏ, புதிய புல எண்.763/1ல் (1)திரு.ஜமால் அப்துல் நாசர், (2) திரு.பாதுல் அஷ்ஹாபு முனவ்வர் (3)திருமதி. செய்யது ஹலிமா தமன்னா, (4) திருமதி.பாத்திமா எஸ்.எச். ஆகியோர் தனித்தனியாக 2000 சதுர அடிக்கு குறைவாக வணிக கட்டிடத்தை கட்டுவதற்காக காயல்பட்டினம் நகராட்சியில் வரைபட அனுமதி கோரி பெறப்பட்டதாகவும், வரைபட அனுமதிக்கு மாறாக சுமாராக 7000 சதுர அடியில் ஒரே கட்டிடமாக விதி மீறி கட்டப்பட்டு, நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் அனுமதியும் பெறப்படாமல் உள்ளதாகவும், வரைபடத்தின்படி தரைதளம் இல்லாமலும், வாகன நிறுத்தம் இடம் இல்லாமலும் விதிகள் மீறப்பட்டு கட்டடம் கட்டப்பட்டுள்ளதாக தெரிவித்து, விதி மீறி கட்டப்பட்ட கட்டிடத்தினை கள ஆய்வு செய்யாத சம்மந்தப்பட்ட நகராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொண்டுள்ளார்.

மனுதாரரின் மனுவின் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, அரசாணை நிலை எண்.195 நகர் ஊரமைப்பு துறை சட்ட பிரிவு 56,57, 80(A) ன்படி, இவ்வலுவலக ந.க.எண்.84/2021/அ2 நாள் 30.09.2024ன் மூலம் தற்போதைய கட்டிட உரிமையாளர்களான 11 நபர்களிடம், புகார் தொடர்பான விளக்கத்தினை நகராட்சியில் சமர்ப்பித்திட கேட்பு அறிவிப்பு வழங்கப்பட்ட கோப்பு நடவடிக்கையில் உள்ளதாக நகராட்சி ஆணையரின் அறிக்கையின் வாயிலாக அறியவருகிறது.

மேலும், காயல்பட்டணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பழைய வார்டு எண்.11, புதிய வார்டு எண்.16, பெரிய நெசவு தெருவில் உள்ள கட்டிடத்தின் பழைய புல எண்.468/1A புதிய புல எண்.763/1–ல் கட்டிட அனுமதி கோரிய ஆவண எண்.1318/2018, 1317/2018, 1319/2018 மற்றும் 354/2018 மூலம் "பெறப்பட்ட கட்டிட அனுமதி" எண்.139/BL/2019/32, 139/BL/2019/33, 139/BL/2019/34, 139/BL/2019/35 (தரை கீழ் தளம் (வாகன நிறுத்தமாகவும்), தரை மற்றும் முதல் தளங்கள் வணிக பயன்பாட்டிற்கு) "திருத்தப்பட்டு" ஆவண எண்.1319/2018, 2394/2019, 2391/2019, 2393/2019, 2392/2019, 2390/2019, 2389/2019, 937/2021, 934/2021, 936/2021, 935/2021, 1317/2018 மூலம் "மீள விண்ணப்பம் செய்யப்பட்டு" **REVISED PLAN APPROVAL** கட்டிட அனுமதி எண்.139/BL/2021/00151, 00154, 00139, 00140, 00141, 00143, 00144, 00147, 00155, 00146, 00145, 00142 என "**மொத்தம் 12 தனித்தனி**" நபர்களில் திருமதி. பாத்திமா என்ற விண்ணப்பதாரருக்கு மட்டும் தரை மற்றும் முதல் தளத்தில் கடைகளும், ஏனைய விண்ணப்பதாரர்களுக்கு தரை மற்றும் முதல் தளங்களில் கடைகளும், இரண்டாம் தளத்தில் குடியிருப்பு பகுதியாகவும் கட்டிட அனுமதி

29.12.2021–ல் வழங்கப்பட்டுள்ளதாகவும், மேலும் அனுமதி கோரிய ஆவணங்களின் தபசில் நான்குமால் படி அனைத்து தனித்தனி கட்டிடத்திற்கும் நகராட்சி சாலை (அல்லது) நெடுஞ்சாலை (அல்லது) ஆவணப்படியான பொது பாதை அணுகு பாதையாக உள்ளதன் அடிப்படையில் வரைபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் தற்போதைய TAMILNADU COMBINED DEVELOPMENT RULE 2019 விதி எண்.8(i). 8(ii), 8(iii)–ன்படி கட்டிடத்திற்கு SET BACK வழங்கப்பட்டதுடன், PARKING விதி எண்.35(4) ANNEXURE –IV –ன்படி கட்டிட பரப்பளவு 50 சதுர மீட்டருக்கு குறைவாக உள்ளதால் எவ்வித வாகன நிறுத்தமும் மேற்குறிப்பிட்டுள்ள 12 தனித்தனிநபர்களின் வரைபட ஒப்புதலில் வழங்கப்படவில்லை என்ற விவரம் காயல்பட்டினம் நகராட்சி ஆணையரின் சார்பில் காயல்பட்டினம் நகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளர் வாக்குமூலத்தின் மூலம் அறிய வருகிறது.

மேலும், நகராட்சி மூலம் “ திருத்தப்பட்ட வரைபடம் மற்றும் கட்டிட அனுமதி” தொடர்பான ஆவணங்கள் விண்ணப்பதாரர் திரு.முஹம்மது சாலிஹ் என்பவர் நகராட்சியில் கோரும்பட்சத்தில் வழங்கப்படும் என நகராட்சி ஆணையரின் சார்பில் காயல்பட்டினம் நகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.

விசாரணைக்குட்படுத்தப்பட்ட இடத்தில் கட்டட உரிமையாளர்களுக்கு கீழ்கண்ட அளவிலான இடம் உள்ள விவரம் கட்டட உரிமையாளர்களின் வாக்குமூலம் வாயிலாக அறியவருகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | திருமதி.நூருல் ஐன் | – | 2394/2019 கிரைய ஆவணத்தின் அடிப்படையில் 172.50 சதுர அடி இடத்தை கிரையம் பெற்றுள்ளார். |
| 2) | திருமதி.செய்யது அஹமது பாத்திமா | – | 2393/2019 கிரைய ஆவணத்தின் அடிப்படையில் 172.50 சதுர அடி இடத்தை கிரையம் பெற்றுள்ளார். |
| 3) | திருமதி.ஜக்கியத்துல் தாஹி ரா | – | 2390/2019 ஆவணத்தின் அடிப்படையில் 200 சதுர இடத்தை கிரையம் பெற்றுள்ளார். |
| 4) | திரு.கபீர் மற்றும் அவரது மனைவி திருமதி.முஸ்பிகா | – | 200 சதுர அடி இடத்தை 2389/2019 கிரைய ஆவணத்தின் அடிப்படையில் கிரையம் பெற்றுள்ளார். |
| 5) | திருமதி ஹலிமா தமன்னா | – | குடும்பத்திற்குப் பாத்தியப்பட்ட இடத்தில் ஏற்பாடு ஆவணம் 1317/2018 மூலம் பாத்தியப்படுத்திய இடத்தில் ஏற்பாடு ஆவணம் 937/2021 மற்றும் 936/2021 மூலம் தனது சகோதரன் பாதுல் அஷ்ஹாபு முனவ்வர் அவர்களுக்கு நன்கொடை கொடுத்து விட்ட நிலையில் தனக்கு எஞ்சிய 172.50 சதுர அடி வைத்துள்ளார். |
| 6) | திருமதி. S.H.பாத்திமா | – | தங்கள் குடும்பத்திற்குப் பாத்தியப்பட்ட இடத்தில் பகுதியை விற்று விட்டு, எஞ்சியுள்ள பகுதியில் ஏற்பாடு ஆவணம் 1319/2018 மூலம் பாத்தியப்படுத்தி தந்த இடத்தில் பிரிதொரு ஏற்பாடு ஆவணம் 935/2021 மூலம் தனது மகள் தமன்னாவுக்கும் ஏற்பாடு ஆவணம் 936/2021 மூலம் மகன் பாதுல் அஷ்ஹாபுக்கும், ஏற்பாடு ஆவணம் 934/2021 மூலம் கணவர் ஜமால் அப்துல் நாசர் அவர்களுக்கும் நன்கொடையாக கொடுத்து விட்டு எஞ்சிய 148.40 சதுர அடி இடத்தினை வைத்துள்ளார். |
| 7) | திரு.S.A.K.முஹம்மது அலி | – | 2392/2019 கிரைய ஆவணம் மூலம் 172.50 சதுர அடி இடம், பாதை வசதிகளுடன் கிரையம் பெற்றுள்ளார். |

| | | | |
|---|---|---|---|
| 8) | திருமதி. செய்யது பஜீலா | – | 2391/2021 ஆவணத்தின் அடிப்படையில் 200 சதுர அடி இடம் கிரையம் பெற்றுள்ளார். |
| 9) | திரு.பாதுல் அஷ்ஹாப் முனவ்வர் என்பவர் தனக்காகவும், திரு.ஜமால் அப்துல் நாசர் என்பவருக்காகவும் | – | காயல்பட்டணம் தென்பாக கிராமத்தில் எனது தந்தையான திரு.ஜமால் அப்துல் நாசர் அவர்களுக்கு சொந்தமான இடத்தில் கட்டிடம் கட்டும் பொருட்டு நான்கு வரைபட ஒப்புதல்கள் காயல்பட்டணம் நகராட்சியில் எனது தந்தையால் பெறப்பட்டது. பின்னர் அவ்விடத்தில் ஒப்புதல் வரைபடப்படி கட்டிடம் கட்ட இயலாத காரணத்தால், குடும்ப சூழ்நிலை காரணமாக கிரையம் கொடுத்துவிட்டு, எஞ்சிய இடத்தில் 165 சதுர அடி மற்றும் 200 சதுர அடியில் தனக்கும், 165 சதுர அடி தனது தந்தைக்கும், 2021–ல் வரைபட மாற்றம் செய்து 03 திருத்திய வரைபட ஒப்புதல் பெறப்பட்டது. தங்களது கட்டிடம் வரைபட ஒப்புதல் அனுமதிப்படி Basement மற்றும் வாகன நிறுத்துமிடம் தேவையில்லை. தாங்கள் கட்டியுள்ள கட்டிடத்தில் எந்தவித விதிமீறலும் இல்லை. மனுதாரர் இம்முறை மன்றத்தில் சமர்ப்பித்துள்ளது, 2019ஆம் ஆண்டில் பெறப்பட்ட வரைபடம். |

மேலும் மேற்படி கட்டிட உரிமையாளர்கள் 2021–ல் திருத்திய வரைபட ஒப்புதல் பெற்று, அதன்படி கட்டிடம் கட்டியுள்ளதாகவும், புகார் மனுதாரரல் சமர்பிக்கப்பட்டுள்ள வரைபட ஒப்புதல் முன்னாள் உரிமையாளர் பெற்ற வரைபட ஒப்புதல் எனவும், மேற்படி வரைபடத்திற்கும் தற்போதைய வரைபட ஒப்புதலுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என்ற விவரம் கட்டிட உரிமையளார்களின் வாக்குமூலம் வாயிலாக அறியவருகிறது.

இந்நேர்வில், மனுதாரால் புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடங்கள் தமிழ்நாடு ஒருங்கிணைந்த கட்டிட விதிகள், 2019–ன் படியும், 2021–ஆம் ஆண்டு வழங்கப்பட்ட திருத்திய வரைபட ஒப்புதல் படியும் கட்டப்பட்டுள்ளதா என்பது குறித்து கள ஆய்வு மேற்கொள்ளுமாறும், அதனடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் காயல்பட்டிணம் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என முடிவெடுத்து, அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2025ஆம் ஆண்டு, மே திங்கள் 16–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு.M.S.முஹம்மது சாலிஹ்,
   பழைய எண்.37, புதிய எண்.86,
   முத்துமாரி செட்டி தெரு, சென்னை – 600 001.

2. நகராட்சி ஆணையர்,
   காயல்பட்டிணம் நகராட்சி,
   காயல்பட்டிணம், தூத்துக்குடி மாவட்டம்.

3. திருமதி.பாதுல் அஷ்ஹாப் முனவ்வர்,
   65, 4வது வடக்கு குறுக்குத் தெரு,
   ஸ்ரீ கபாலிஸ்வரன் நகர், நீலாங்கரை, சென்னை – 600 115.

4. திருமதி.செய்யது ஹலிமா தமன்னா,
65, 4வது வடக்கு குறுக்குத் தெரு,
ஸ்ரீ கபாலிஸ்வரன் நகர், நீலாங்கரை,சென்னை – 600 115.
5. திரு.ஜமால் அப்துல் நாசர்,
65, 4வது வடக்கு குறுக்குத் தெரு,
ஸ்ரீ கபாலிஸ்வரன் நகர், நீலாங்கரை, சென்னை – 600 115.
6. திருமதி.S.H.பாத்திமா,
65, 4வது வடக்கு குறுக்குத் தெரு,
ஸ்ரீ கபாலிஸ்வரன் நகர், நீலாங்கரை, சென்னை – 600 115.
7. திரு.S.A.K. முஹம்மது அலி,
1–C கடற்கரை தெரு,
காயல்பட்டினம் – 628 204.
தூத்துக்குடி மாவட்டம்.
8. திருமதி.S.I. காதிரா முஸ்பிகா,
10–C. பண்டகசாலை தெரு,
காயல்பட்டிணம் – 628 204, தூத்துக்குடி மாவட்டம்.
9. திரு.I.N. கபீர்,
10–C. பண்டகசாலை தெரு,
காயல்பட்டிணம் – 628 204.
தூத்துக்குடி மாவட்டம்.
10. திருமதி.ஜக்கியத்துல் தாஹிரா,
175, கடற்கரை தெரு,
காயல்பட்டிணம் – 628 2024.
தூத்துக்குடி மாவட்டம்.
11. திருமதி.செய்யது அகமது பாத்திமா,
10, அப்பா பள்ளி தெரு,
காயல்பட்டிணம்–628 2024.
தூத்துக்குடி மாவட்டம்.
12. திருமதி.செய்யது பஜீலா,
35E–1, L.F. ரோடு,
காயல்பட்டிணம் – 628 204.
தூத்துக்குடி மாவட்டம்.
13. திருமதி.நூருல் ஜன்,
3, கடற்கரை தெரு,
காயல்பட்டிணம்–628 2024,
தூத்துக்குடி மாவட்டம்.
14. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,எம்.ஆர்.சி.நகர்,
சென்னை – 600 028.

15. ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இகோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்